# அரசாங்க சேவை ஆணைக்குழு
# பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
# (பொது நிர்வாகப் பிரிவு)
# இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இன் தரம் I இன் "பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)" பதவிக்கு நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல்

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் (பொது நிர்வாகப் பிரிவிற்காக) பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) 01 பதவி வெற்றிடம் நிலவுவதுடன், அதற்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் செயலூக்கமான சேவையில் ஈடுபட்டுள்ள வகுப்பு I இன் தரம் I இன் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம், 2019.09.12 ஆம் திகதிய வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 28/2019 இன் இணைப்பு 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினை 2026.05.28 ஆம் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக பொது நிர்வாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் (உள்ளக நிர்வாகம்) அவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி - செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07.

03. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2050/43 மற்றும் 2017.12.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமையின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு நியமிக்கப்படுவார்.

04. அவ் நேர்முகப்பரீட்சையின் புள்ளிகள் வழங்கும் விபரமான புள்ளிகள் நடைமுறை

| | **பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்** | **அதிகபட்ச புள்ளிகளின் அளவு** |
|---|---|---|
| 01 | சேவை அனுபவம்- 60<br>I. பதவிக்குரிய தரத்தில் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகளும், ஒரு ஆண்டிற்கு குறைந்த, 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு 02 ½ புள்ளிகளும் வழங்கப்படும். 06 மாதங்களுக்கு குறைந்த சேவை காலமொன்றிற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது | 50 |

| | | |
|---|---|---|
| | II. தாபனத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளுக்கு (பிரதி/உதவிப் பணிப்பாளராக) உரிய முன்னைய அனுபவத்திற்காக (அதிகபட்சம் 05 ஆண்டுகளுக்கு), ஒரு ஆண்டிற்கு 02 புள்ளிகள் வீதமும், 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு 01 புள்ளி வீதமும் வழங்கப்படும். 06 மாதங்களுக்கும் குறைவான சேவைக்காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | 10 |
| 02 | **<u>திறமை</u>** - 40<br>I. **<u>கல்வித் தகைமைகள்</u>**<br>உத்தியோகத்தர்களைச் சேவைக்கு ஆட்சேர்க்கும் போது கருத்திற் கொள்ளப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப்பிரமாணக்குறிப்பின் விசேடத்துவத் துறை வகைப்படுத்தலுக்கு உரிய அல்லது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பதவிக்குத் உரியதான கல்வித் தகைமைகள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்.<br>(அ) பட்டபின்பட்டம் - புள்ளிகள் - 15<br>(ஆ) பட்டபின்பட்ட டிப்ளோமா - புள்ளிகள் - 10<br>• வழங்கப்பட்டுள்ள மிக உயர்ந்த தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.<br>கவனிக்க: அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 15 |
| | II. **<u>தொழிற் தகைமைகள்</u>**<br>(அ)<br>i. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடையதாக பெற்றுள்ள, குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தைக் கொண்ட டிப்ளோமா பாடநெறிக்காக - 10 புள்ளிகள் (உள்நாட்டு/வெளிநாட்டு)<br>ii. அதே துறையில் 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட, ஒரு வருடத்திற்கு குறைவான பாடநெறிகளுக்காக - 05 புள்ளிகள் | 10 |

| | | |
|---|---|---|
| | (ஆ) தாபனத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் பதவிக்குரிய துறையில் பூர்த்தி செய்யப்பட்ட, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் சான்றிதழ்களுக்கு (Professional Certifications), அவற்றின் காலப்பகுதியைக் கருத்திற் கொள்ளாது மேலுள்ள 2 (II) (அ) (i) இன் கீழ் கருத்திற் கொள்ளப்படும்.<br>உதா -<br>1. BCS/ACS<br>2. Microsoft Certifications<br>3. Sun Certifications<br>4. Cisco Certifications<br>5. CISSP Certifications | |
| | III. **<u>விசேட பணிகள்/பங்களிப்புகள்</u>**<br><br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள், மேம்படுத்தல்கள் மற்றும் வெற்றிகள், பரிசுகள், பாராட்டுக்கள் என்பவற்றிற்கு இப்பிரிவின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>இப்பகுதிக்காக (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டு தொகுதிகளின் கீழும் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும்.<br>(அ) புதிய கண்டுபிடிப்புகள், மேம்படுத்தல்கள், வெற்றிகள், பரிசுகள் என்பவற்றில் ஒன்றிற்கு தலா 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 05 விடயங்களுக்கு - 10 புள்ளிகள்<br><br>(ஆ) பொது 230b படிவத்தில் சமர்ப்பித்து, அமைச்சின் செயலாளர்/ தாபனத் தலைவரின் மூலம் சான்றுரைப்படுத்திய பாராட்டுச் சான்றிதழ் 1ற்கு தலா 01 புள்ளி வீதம் அதிகபட்சம் 05 பாராட்டுக்களுக்கு மாத்திரம், அதாவது அதிகபட்சமாக 05 புள்ளிகள் மாத்திரமே வழங்கப்படும்.<br><br>மேலே III (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்காக<br>உதாரணம்:<br>1. மென்பொருள் வடிவமைப்பு / அபிவிருத்தி (software Designing / Development)<br>2. வலையமைப்பு நிர்வாகம் (Network Administration)<br>3. முறைமை நிர்வாகம் (System Administration)<br>4. தரவுத்தள நிர்வாகம் (Database Administration)<br>5. பொதுவான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிகள் மற்றும் ஏனையவை (General ICT Task, etc.) | 10 |

| | | |
|---|---|---|
| | **கவனிக்க**<br>• புதிய கண்டுபிடிப்புகள் அல்லது மேம்படுத்தல்கள் விண்ணப்பதாரரின் மூலம் மேற்கொள்ளப்பட்டன என்பதை தாபனத் தலைவர் மூலம் சான்றுரைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>• பரிசுகள் மற்றும் வெற்றிகள் விண்ணப்பதாரரின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதென முறையான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | |
| | IV. <u>நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை</u><br><br>(அ) தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>(ஆ) தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br>(இ) தொழில்சார் ஒழுக்கநெறி - 01 புள்ளி | 05 |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

ஒப்பம்./எஸ். ஆலோகபண்டார தினம் - 2026.05.22

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

தொலைபேசி : 011 2695738

தொலைநகல் : 011 2695279

மின்னஞ்சல் முகவரி : secretary@pubad.gov.lk

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**(பொது நிர்வாகப் பிரிவு)**

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு நியமிப்பதற்கான விண்ணப்பப்படிவம்

(அ) பகுதி - உத்தியோகத்தரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. முழுப் பெயர் : -
2. பிறந்த திகதி :-
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-
4. சேவைக்காலம் :-

| வகுப்பு/தரம் | சேவைக்காலம் |
|---|---|
| வகுப்பு 1 தரம் I | |
| வகுப்பு 1 தரம் II | |
| வகுப்பு 1 தரம் III | |

5. தற்போது சேவையில் ஈடுபடும் பதவி மற்றும் பணித்துறை ....................................................
6. கல்வித் தகைமைகள்
   - பெற்றுக் கொண்டுள்ள பட்டபின்பட்டம்/ பட்டபின்பட்ட டிப்ளோமா தொடர்பான விபரங்கள்

| பட்டபின்பட்டம் / பட்டபின்பட்ட டிப்ளோமா | ஆண்டு | பல்கலைக்கழகம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

7. தொழிற் தகைமைகள்......................................................................................................................
8. பூர்த்தி செய்துள்ள விசேட பணிகள்

| ஆற்றப்பட்ட சேவை மற்றும் விசேட பணி/ பங்களிப்புகள்/ வெற்றிகள் | விபரங்கள் | தாபனத் தலைவரின் சான்றிதழ் உண்டு/இல்லை |
|---|---|---|
| | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

--------------------------------------------

தினம் .....................................

விண்ணப்பதாரரின் கையொப்பம் பதவிப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

(ஆ) பகுதி - தாபனத் தலைவரின் மூலம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன்னைய 03 வருடங்களில் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

2. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன்னைய 03 வருடங்களுக்குள் சம்பள ஏற்றங்களைப் பெற்றுள்ளார் / பெறவில்லை.

3. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன்னைய 03 வருடங்களுக்குள் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார் / உட்படுத்தப்படவில்லை.

4. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டிருக்கின்ற அல்லது ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்று வருகின்றன / நடைபெறவில்லை.

5. முன்னைய 03 வருடங்களில் பெற்றுக்கொண்ட லீவு விபரங்கள்

| **தொடரிலக்கம்** | **வருடம்** | **சம்பளத்துடனான லீவு** | **அரைச் சம்பள லீவு** | **சம்பளமற்ற லீவு** |
|---|---|---|---|---|
| | | | | |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பின் பிரகாரம் சரியானது எனவும், இவ் உத்தியோகத்தரின் மூலம் விண்ணப்பிக்கும் பதவிக்காக உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின், அதற்கு அவன்/அவள் பதிலாள் இன்றி/ உடன்/ பதிலாள் ஒருவரை பின்னர் வழங்கும் அடிப்படையில் விடுவிக்கலாம் எனவும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

---------------------------------------------------------------

திணைக்கள / தாபனத் தலைவரின் கையொப்பம்
பதவிப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை